Ti Nb Ir Ta Ru Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

Tiaano® Innovation In Inert Metals — 23 YEARS Since 1992

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Mob: +91 94445 69900 Email: marketing@tianode.com Web: www.tianode.com

# “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2015-2016

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 156% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Nov. 15 : 910 Nos.
  - Up to Oct. 15 : 901 Nos.
- **Performance Oct. 15 ...**
  - Turnover growth : 4.38%
  - Employment growth : 1.11%
  - 100% Attendance : 6.66 %

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano® (Innovation In Inert Metals) – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil (Results for environment) – Water Treatment Equipments.
- Fib Tec COMPOSITE – FRP/ GRP Equipments.
- HydroGen™ Go Green – HHO Generators
- Titanictrade (WE DELIVER VALUE CHAIN) – Portal for Exotic Metals
- Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSE Curriculam)

### ACHIEVEMENT CHART




## மொழி

காது கேளாதவர்களுக்கும், பேசும் திறன் அற்றவர்களுக்கும் சில சமயம் தொலைக்காட்சியில் செய்திகளோ அல்லது வேறேதாவது நிகழ்ச்சிகளோ ஒளிப்பரப்பப்படுவதைப் பார்த்திருப்பீர்கள். இப்படிப்பட்டவர்களுக்கான நிகழ்ச்சிகள் என்ன மொழியில் ஒளிபரப்பப்படுகின்றன? அதன் பெயர்தான் சைகை மொழி. கை விரல்களின் அசைவாலும், உதட்டசைவாலும் காது கேளாத மற்றும் பேசும் திறன் அற்றவர்கள், தங்களுக்கிடையில் தகவலைப் பரிமாறிக் கொள்கிற ஒரு பிரத்தியோக மொழி இது.

முற்காலத்தில், அதாவது பதினாறாம் நூற்றாண்டு வரை இப்படிப்பட்டவர்களை தகாதவர்களாகக் கருதியவர்களும் உண்டு, இப்படிப் புறக்கணிப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்காக பதினெட்டாம் நூற்றாண்டில் “சால்ஸ் டிலீபெ” எனும் பிரெஞ்சுக்காரர் ஒரு வழி கண்டுபிடித்தார். அதுதான் சைகைகளால் ஆன மொழி. கைகளாலும் கைவிரல்களாலும் பலவிதமான சைகைகள் காட்டுவதுதான் இதில் முக்கியம். இந்த சைகைகளைக் கொண்டு ஒரு விஷயத்தை குரலின் உதவியின்றி அவர்களுக்குப் புரியவைத்துவிட முடியும்.

இந்த சைகை மொழியின் எழுத்துக்கள் ‘ஊஜஜசஉத அகடஏஅஆஉப’ என்று அழைக்கப்படுகின்றன. விரல்களில் மட்டும் அல்ல, உதடுகளின் அசைவிலும் இந்த மொழியின் சில அம்சங்கள் உள்ளன. இப்படிப்பட்ட ஒரு மொழி வந்தவுடன் காது கேளாதவரும், பேசும் திறனற்றோரும் மற்றவர்களைப் போல நிறைய விஷயங்களில் வெற்றிபெற முடிந்தது.

*By : Ms. P. E. Nancy*
*Director – Admin*

## TIME MANAGEMENT

“Three things you cannot recover in life, the WORD after it is said, the MOMENT after it is missed, and the TIME after it is gone”

Time is Precious

“Time management” is making the best use of time. It really means managing yourself. It is a way to be happier, more effective, creative and more successful. Time management will help us to avoid spending time on things that are unimportant. To manage your time better and get your job finish faster the following tips can be followed.

- List making
- Learning to prioritize
- Breaking up the task you have to do
- Getting rid of distraction
- Rewarding yourself by relaxing, reading a book or watching T.V.

The management of time is the Management of life. So finally dear all, ‘**Time**’ is precious, ‘**waste**’ it wisely.

*By : Mrs. Suguna Davidraj*
*Principal – Tiaano Vidyashrm*

## FUNCTIONAL WISHES




Happy New Year
01st January




Happy Pongal
15th January




Happy Republic Day
26th January

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mr. G. Ravindran** — **06th Jan.**
Marketing

**Mr. C. Siva Kumar** — **10th Jan.**
Production

**Mr. R. Manikandan** — **14th Jan.**
Coating

**Mr. P. Munuswamy** — **19th Jan.**
Fibtec

**Mrs. S. SasiRekha** — **19th Jan.**
Marketing

**Mrs. S. YagaValli** — **20th Jan.**
Administration

**Mr. M. NagaRajan** — **20th Jan.**
Production

**Mr. S. Karunakaran** — **20th Jan.**
Coating

**Mr. G. Murugesan** — **21st Jan.**
Purchase

**Mrs. M. Sudha** — **26th Jan.**
Marketing

**Mrs. J. Vanajambika Jeyakumar** — **27th Jan.**
Director – Coating

**Best Wishes from Tiaano Employees**

## கடல் நீர் உப்புக் கரிப்பது ஏன்?

பார்ப்பதற்கு அழகாகத் தான் இருக்கிறது. ஆனால் கடல் நீரை ஒரு கை எடுத்து வாயில் ஊற்றிக் கொண்டால் வயிற்றைக் குமட்டுகிற அளவுக்கு உப்புக் கரிக்கும். சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்னர் ஆராய்ச்சியாளர் ஒருவர் உலகின் கடல்களில் 77 இடங்களிலிருந்து கடல் நீர் சாம்பிள்களை சேகரித்து ஆராய்ந்தார். கடல் நீரில் எடை அளவில் சராசரியாக 3.5 சதவிகித அளவுக்கு பல்வேறு உப்புகள் கலந்துள்ளதாக அவர் கண்டறிந்தார். அதாவது ஒரு லிட்டர் கடல் நீரில் 3.5 கிராம் அளவுக்கு உப்பு உள்ளது.

கடல் நீருடன் ஒப்பிட்டால் நதி நீர் உப்புக் கரிப்பது இல்லை. நதி நீர் ருசியாகவே உள்ளது. ஆனால் கடல் நீரில் கலந்துள்ள உப்புகள் அனைத்தும் நதிகள் மூலம் வந்து சேர்ந்தவையே.

நதிகள் நிலப்பரப்பின் வழியே ஓடி வரும்போது பாறைகளை அரிக்கின்றன. நிலத்தை அரிக்கின்றன. அப்போது நதி நீருடன் பாறைகள், நிலம் ஆகியவற்றிலிருந்து சிறிதளவு உப்பு கலக்கிறது. பல கோடி ஆண்டுகளில் இவ்விதமாக நதிகளால் அடித்துச் செல்லப்பட்ட உப்பு கடல்களில் போய்ச் சேர்ந்துள்ளது.

சூரிய வெப்பம் காரணமாக கடல்களில் உள்ள நீர் ஆவியாக மேகங்களாக உருவெடுக்கின்றன. கடல் நீர் ஆவியாகும் போது உப்பு பின் தங்கிவிடுகிறது. உப்பு இவ்விதம் பின் தங்கிவிடுவதால் தான் மழை நீர் உப்பு கரிப்பது இல்லை. தவிர, உப்பு பின் தங்குகிற அதே நேரத்தில் நதிகள் மூலம் பல கோடி ஆண்டுகளில் மேலும் உப்பு கடலில் வந்து சேர, கடல் நீர் உப்பு கரிக்க ஆரம்பித்தது.

கடல் நீரிலிருந்து சுமார் 400 கோடி டன் உப்பு தனியே பிரிந்து கடலுக்கு அடியில் போய் வண்டல் போலத் தங்கிவிடுவதாக நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர். சூடான காப்பியில் நீங்கள் இரண்டு ஸ்பூன் சர்க்கரை போட்டால் கரைந்து விடும். ஆனால் 6 ஸ்பூன் சர்க்கரை போட்டால் காப்பி சற்று ஆறியவுடன் கூடுதல் சர்க்கரை கரையாமல் அடியில் தங்கும். அது போலத்தான் கடல்களின் அடியில் உப்பு படிகிறது. இக்காரணத்தால் தான் கடல்களின் உப்புத் தன்மை அதிகரிக்காமல் சீராக உள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

## உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும்

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதை கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றின் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டி பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது. சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக்கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்" என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

## தெரிந்து கொள்வோம்

### World Health Organization reveals the top 10 reasons affecting your brain

- No Breakfast
- Overeating
- Smoking
- High sugar consumption
- Air pollution
- Sleep Deprivation
- Head covered while sleeping
- Working your brain during illness
- Lacking in stimulating thoughts
- Talking rarely

### Health Benefits of Drinking Coconut water

- Coconut water is the best hydrating food.
- It is beneficial to maintain good cardiovascular health as it is rich in magnesium and potassium.
- It is a best drink when suffering from kidney stones. it helps to throw out stone form the body by alkalizing urine and prevent further stone formation.
- It gives instant energy. So it is one of the best and natural energy drink.
- Coconut water is rich is potassium and hence prevents muscle cramps.
- Makes bone healthy and strong.
- Coconut oil comprises of Vitamin B like riboflavin, thiamine and pantothenic acid which help to reduce anxiety, depression and stress.
- Coconut water also acts as diuretic. It helps in diseases which retains water in the body.
- Coconut acts as an antioxidant and fight against all the free radicals produced due to stress, pollution and high calorie diet.

*Compiled By : Ms. P. Nirmala Devi*
*Finance*

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. “பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே, அறிவில்லையா உமக்கு” என்று கோபத்துடன் கேட்டான். பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாகப் பற்றிக் கொண்டு “நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விடமாட்டேன்” என்று எச்சரித்தான். பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளை மேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான்.

“ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?” என்றான். பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே “தம்பி...நான் உனக்கு உதவிதான் செய்தேன்? என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான். பெரியவர் விளக்கினார். “நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படி பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்” என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய்விட்டார்.

*Compiled By : Ms. T. Regi*
*Facilitation*

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி XLVIII)

### இரண்டடி உலகம்

வெறுமனே சேமித்தால்மட்டும் போதாது. எந்தப் பொருள் எங்கே வைக்கப் பட்டிருக்கிறது என்கிற விவரம், எல்லாருக்கும் தெரிகிறபடி தெளிவான ‘விஷூவல் கன்ட்ரோல்’ வேண்டும்.

இதைப் புரிந்துகொள்வதற்கு, மீண்டும் ஒருமுறை விமான நிலையத்துக்குள் எட்டிப் பார்ப்போம். வெளியூரிலிருந்து சென்னைக்கு விமானத்தில் வந்து இறங்குகிறீர்கள். உங்களுடைய பெட்டி, படுக்கைகளைச் சுமந்துவருகிற ‘கன்வேயர் பெல்ட்’ எங்கே இருக்கிறது என்று எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?

பிரச்சனையே இல்லை. ‘கன்வேயர் பெல்ட்’ என்று தமிழ், ஆங்கிலம், ஹிந்தி என மூன்று மொழிகளில் எழுதி, பக்கத்திலேயே ஒரு சூட்கேஸின் பொம்மையும் வரைந்து வைத்த அறிவிப்புப் பலகை மின்னுகிறது.

‘மூன்று மொழிகளில் எழுதியபிறகு, இந்த பொம்மை எதற்கு?’ என்று குதர்க்கமாகக் கேட்கக்கூடாது. இந்த மூன்று மொழிகளுமே தெரியாதவர்கள் இந்தியாவிலே இருக்கிறார்கள்.

## கவிதைகள்

### Always Remember

Always remember to forget
The things that made you sad
But never forget to remember
The things that made you glad.
Always remember to forget
The friends that proved untrue.
But don't forget to remember
Those that have stuck by you.
Always remember to forget
The troubles that have passed away.
But never forget to remember
The blessings that come each day.

*Compiled By : Mrs. S. B. Gokila*
*Quality Control*

### உச்சிக்குள் அமர்ந்த உயர்வாழ்வு

உச்சியிலே நீ சென்றால் உடனே காணும்
ஒரு அதிசயம் வளைவாம் சுற்று ஆகும்
அச்சமயம் அறிவிற்கோர் வியப்பு காணும்
அவ்விடத்தே நிலைத்திருக்கப் பழகிவிட்டால்
இச்சையெலாம் பிறக்குமிடம் கண்டு
கொள்வாய்
எதுவேண்டும் வேண்டாமன்றிரண்டுங்கண்டு
நச்சுவினை இச்சையெலாம் அழித்துவிட்டு
தீய எண்ணமே மீதம் கொள்வாய்.

*Compiled By : Mr. V. Azhakesan*
*Marketing*

## சிந்தனைக்கு

பயத்திற்கு இடம் கொடுக்காதே. எத்தனை முறை தோல்வி அடைந்தாய் என்பதை எண்ணிக் கொண்டிருக்காதே. அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

காலத்திற்கு எல்லையில்லை. முன்னேறு. திரும்பத்திரும்ப உன் உண்மை இயல்பை வலியுறுத்து, ஒளி வந்தே தீரும்.

*Compiled By : Mrs. R. Jayanthi*
*Marketing*

**பணியாளர்கள் மற்றும்**
பணியாளர்களின்
குடும்பத்தாரிடமிருந்து **கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

அவர்களெல்லாம் விமான நிலையத்துக்கு வரக்கூடாதா? கன்வேயர் பெல்ட்டில் சூட்கேஸ் தேடக்கூடாதா?

செய்டன் வலியுறுத்தும் விஷுவல் கன்ட்ரோலின் மிக முக்கியமான ஓர் உத்தி, இந்த பொம்மை வரையும் பழக்கம். ஒரு விஷயத்தை எல்லாருக்கும் தெளிவாகச் சென்று சேர்க்க விரும்புகிறவர்கள் வார்த்தைகளை நம்பக்கூடாது. பொம்மைகளை தான் நம்ப வேண்டும்.

இதன்மூலம் தவறான புரிதலுக்கு வாய்ப்பு குறைகிறது. தவிர, ஓர் ஓவியம் அல்லது புகைப்படத்தைப் பார்த்து நாம் புரிந்து கொள்கிற வேகம், எழுதப்பட்டிருக்கும் தகவல்களைப் படித்துப் புரிந்து கொள்வதைவிட அதிகம்.

இதனால்தான், நகராட்சிக் கழிப்பறைகளில் தொடங்கி ஐந்து நட்சத்திர விடுதிகள்வரை எல்லா இடங்களிலும் படங்களின்மூலம் செய்திகளை, தகவல்களை அறிவிக்கும் பழக்கம் பின்பற்றப்படுகிறது. பயனுள்ள இந்த பொம்மைகளை, ஐகான்ஸ் என்ற பெயரில் கணிணி மென்பொருள்களில் கூடப் பார்க்கலாம்.

தொடரும்...

## சிங்கப்பூர் வளர்ச்சி



ஒரு பெரிய நாட்டோட பிரதமர் நம்ம நாட்டுக்கு வந்திருக்கிறார் என்பதற்காக ஆடம்பரமான ராஜவிருந்து ஏற்பாடு செய்து வீணாக பணத்தை செலவழிக்காமல், "கோமள விலாஸ்" உணவகத்திற்கு அழைத்துச் சென்று ரெண்டு வடையும் கெட்டி சட்னியும் வாங்கிக் கொடுத்து அனுப்பியிருக்கிறார் சிங்கப்பூர் பிரதமர். "சிங்கப்பூர் வளர்ச்சிக்கு காரணம் வீண்செலவை தவிர்ப்பது என்பது இப்போது தெரிகின்றதா"!